பங்கேற்போம் ! உரிமையை நிலைநாட்டுவோம் !

ARUNODHAYA Children Sangam

அருணோதயா குழந்தைகள் சங்க கூட்டமைப்பு

# சிட்டெறும்பு பேசுது

*தனிச் சுற்றுக்கு மட்டும்

உயிர் : 03
குரல் : 03

ஜூலை 2025 – செப்டம்பர் 2025




# போரில்லா உலகம் படைப்போம்

அருணோதயா
குழந்தை தொழிலாளர் மையம்

# சிட்டெறும்பு பேசுது

உயிர் : 03 | குரல் : 03

ஜூலை – செப்டம்பர் 2025

**ஆசிரியர்கள்**

L. யுவராணி, V.சுஜிதா, S.ஜிஷ்ணு, K.நிஷாந்த்

**இணை ஆசிரியர்கள்**

G. லட்சுமிபிரியா, D. சந்தோஷ், M. சாதனா A.சஞ்சய். G.அபிநயா. J.ஐஸ்வரியா

**உதவி ஆசிரியர்கள்**

G. லட்சுமிபிரியா, M. சுஹாசினி. P. தமிழ், S. லோகேஷ், V. சுஜிதா, S. தங்கவித்யா, S.சக்தி முருகன், R. கன்னியம்மா, M. யுவராஜ்,

**நிருபர்கள்**

S. நிவிஸ், A. ஹேமன், V. நாகராணி, S. ஓவியா, D. ரொபினா, M. ஜெனிலியா S. தங்கவித்யா, S.சக்தி முருகன், R. கன்னியம்மா, M. யுவராஜ்,

**ஓவியர்கள்**

S.விஷால், H. மோகித், D.கவியரசன்,S.தர்ஷன், H. சக்திராஜன், P. தனுஷ். D.அஷ்வின் A.முஹம்மது சுல்தான், P.S. பத்மேஷ்

**நிர்வாகம்**

முனைவர்.வர்ஜில் டி சாமி

நிர்வாக இயக்குநர்

**ஒருங்கிணைப்பு**

திருமதி. செ. செல்வி

குழந்தை பங்கேற்பு கருத்தியல் வழிநடத்துனர்

**வடிவமைப்பு**

S. விஷால், K. நிஷாந்த், L. யுவராணி, S.ஜிஷ்ணு,

வடிவமைப்பில் உதவி. திரு.G. டான்போஸ்கோ,

**தொடர்பு முகவரி**

அருணோதயா குழந்தை தொழிலாளர் மையம்

19/9/2, பஜார் தெரு. இராயபுரம்

சென்னை – 600013

**Phone** : 044-42632264

**Mobile** : 9444051529, 8925274527

**மின்னஞ்சல்**

arunodhayaorg@gmail.com

**இணையதளம்**

www.arunodhayacentre.in



# ஆசிரியர் உரை

**நண்பர்களே வணக்கம்!! அனைவரும் நலம் தானே...!**

வந்தே மாதரம் !!
வணக்கம் நண்பர்களே!!
அனைவரும் நலமாக இருப்பீர்கள் என்று நம்புகின்றேன்!!

நாம் திட்டமிட்ட படி நமது நாடு பற்றியும் சுதந்திர போராட்ட வீரர்கள் பற்றியும், போரில்லா அமைதியான உலகம் பற்றியும் இந்த இதழில் எழுதியுள்ளோம். இதழை படிக்கும் அனைவரும் பெருமை கொள்ளும் விதமாக நம் அனைவரின் கட்டுரைகளும் அமைந்துள்ளது இந்த இதழின் சிறப்பம்சமாக உள்ளது.

நாம் அனைவரும் இந்த பூமியில் வாழ்வதற்கு காற்று,நீர், உணவு போன்றவை எவ்வளவு அவசியமோ அதே போல் சுதந்திரமும் மிக மிக அவசியம். நம் தாத்தா பாட்டி காலத்துக்கு முன் நம் நாடும் சுதந்திரம் இல்லாமல் ஆங்கிலேயர் ஆட்சியில் இருந்தது.. நம் நாட்டின் மேல் அதிக பற்று கொண்ட சுதந்திர போராட்ட வீரர்கள் தன் வாழ்கையைப் பணயமாகவைத்து உயிர் தியாகம் செய்து நமக்கு சுதந்திரம் கிடைக்க வழிவகை செய்தனர். அவர்கள் செய்த தியாகத்தின் விளைவாக சென்ற ஆகஸ்ட்15 அன்று 78ஆம் சுதந்திர தினவிழாவைக் கொண்டாடி மகிழ்ந்தோம், தேச விடுதலைக்காக பாடுபட்ட தலைவர்களை நினைவு கூர்ந்தோம்.

இந்த சுதந்திரம் நிலைத்திருக்க வேண்டும். அதே நேரம் நாம் செய்திகளைப் பார்க்கும் போதும், கேட்கும் போதும் நாடுகளுக்கிடையே நடக்கும் போர் பற்றிய செய்திகளாகவே உள்ளது நாம் அறிந்ததே. நாடுகளுக்கு இடையே சண்டை எதனால் நடைபெறுகிறது? காரணம் என்ன? போன்ற கேள்விகள் நமக்குள்ளே எழுகின்றது. அதற்கான விடைகள் சிறிதளவு இந்த இதழில் உள்ளது. மேலும் நாம் போர் குறித்து அறிந்து கொள்வது அவசியம். ஏனென்றால் போரில் அதிகமாக பாதிக்கப்படுவது நம்மை போன்ற குழந்தைகள் தான். உலகம் அமைதியாகவும், மகிழ்ச்சியாகவும், ஒற்றுமையுடனும் விளங்க அரசும், உலகநாடுகளும் ஒப்பந்தங்களையும், கொள்கை மாற்றங்களும் கொண்டு வருவது அவசியம். குழந்தைகளாகிய நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து போர் இல்லா உலகத்தை உண்டாக்க நம் கருத்துக்களை குழந்தைகளுக்கான அமைப்புகள், அரசியல் அமைப்புகள் மற்றும் ஐநாசபையிடமும் தெரிவிக்க வேண்டும்.

**வாருங்கள் நண்பர்களே!!**
**“போரில்லா சமத்துவ உலகத்தை படைப்போம்**



**S. ஜிஷ்ணு**
10 ஆம் வகுப்பு. எண்ணூர்

# அருணோதயா குழந்தைகள் சங்க கூட்டமைப்பு செயல்பாடுகள்

(ஜூலை - செப்டம்பர் 2025)

## குழந்தைகள் சங்க மூன்று மாத செயல்பாடு

| வரிசை எண் | மாதம் | குழந்தைகள் சங்க கூட்டத்தில் பேசப்பட்ட கருத்துக்கள் |
|---|---|---|
| 1 | ஜூலை | ➤ கும்பகோணம் தீ விபத்து நினைவேந்தல் திட்டமிடல்<br>➤ அருணோதயா குழந்தைகள் பாதுகாப்பு கொள்கையில் உள்ள பாதுகாப்பு குழு உறுப்பினர்கள் பெயர் மற்றும் தொலைபேசி எண்கள் குழந்தைகளுக்கு தெரிவிக்கப்பட்டது. |
| 2 | ஆகஸ்ட் | ➤ குழந்தைகள் நகரசபை திட்டமிடல் மற்றும் தகவல்கள் அளிக்கப்பட்டது.<br>➤ மாநில குழந்தைகள் பாதுகாப்பு ஆணையம் சந்திப்பு மற்றும் கோரிக்கைகள் குறித்த தகவல்கள் அளிக்கப்பட்டது<br>➤ ஒருங்கிணைப்பு கூட்டம் தகவல்கள் மற்றும் அதில் முடிவெடுக்க வேண்டிய விஷயங்கள் குறித்து முடிவெடுத்தல் |
| 3 | செப்டம்பர் | ➤ அருணோதயா குழந்தைகள் சங்க கூட்டமைப்பு வேட்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டது.<br>➤ தேர்தல் குறித்து திட்டமிடல் செய்யப்பட்டது.<br>➤ தேர்தல் நடத்தப்பட்டு புதிய செயற்குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கபட்டனர்.<br>➤ சிட்டெறும்புக்காக குழந்தைகள் கட்டுரைகள் எழுதி கொடுத்தனர். |

### ஜூலை

**16. 7.2025** அன்று கும்பகோணம் தீ விபத்து நினைவஞ்சலி நிகழ்வை குழந்தைகள் சங்கங்களிலும், பள்ளிகளிலும் நடத்தினார்கள். அந்நாளை குழந்தைகள் பாதுகாப்பு தினமாக அறிவிக்க கோரியும் குழந்தைகளின் பொதுவான கோரிக்கைகளை மாநில குழந்தைகள் பாதுகாப்பு ஆணைய உறுப்பினர்களை சந்தித்து அளிக்க வேண்டும் என குழந்தைகள் திட்டமிட்டனர்.



**19.7.25** அன்று அருணோதயா குழந்தைகள் சங்க கூட்டமைப்பு செயற்குழு கூட்டம் இணையத்தளம் வழியாக நடைபெற்றது. இதில் குழந்தைகள் சங்க ஒருங்கிணைப்பு கூட்டம் குறித்து முடிவுகள் எடுக்கபட்டது.

**29.7.25 ,30.7.25** ஆகிய தேதிகளில் போரில்லா உலகம் குறித்த பயிற்சி திருப்பூரில் உள்ள அவினாசியில் பங்கேற்பு உரிமையை உறுதி செய்யும் கூட்டமைப்பின் மூலம் நடைபெற்றது. இதில் முன்னால் குழந்தைகள் சங்க உறுப்பினர் செல்வன். ஜீவா கருத்தியல் வழி நடத்துனர் திருமதி.செல்வி கலந்து கொண்டனர்.



## ஆகஸ்ட்

**06.08.2025** அன்று குழந்தைகள் கல்வி மற்றும் பாதுகாப்பு குழு கூட்டம் ஆல் இந்தியா ரேடியோ பகுதியில் நடைபெற்றது. குழந்தைகள் சங்கத்தில் இருந்து 2 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

**09.08.2025** அன்று 80 குழந்தைகளுக்கு செல்வன்.ஜீவா அவர்கள் போரில்லா உலகத்தை படைப்போம் என்ற பயிற்சியை அளித்தார். இதன் தாக்கமாக குழந்தைகள் அனைவரும் போரில்லா உலகம் தலைப்பில் சிட்டெறும்பு புத்தகத்தில் தன் கருத்தினையும், படித்தவற்றையும் எழுதுவதாக முடிவு செய்தனர்.

**11.8.2025,12.8.2025** ஆகிய தேதிகளில் 10 வார்டுகளில் குழந்தைகள் நகரசபை திட்டமிடல் கூட்டம் குழந்தை கவுன்சிலர்கள் மூலம் நடத்தப்பட்டது. இக்கூட்டத்தில் குழந்தைகள் நகரசபை திட்டமிடல் மற்றும் கோரிக்கைகள் தயாரிப்பு நடைபெற்றது.

**15.8.2025,16.8.2025** ஆகிய தேதிகளில் குழந்தைகள் நகரசபை கூட்டம் 10 வார்டுகளில் நடத்தப்பட்டது. இக்கூட்டங்களில் மாமன்ற உறுப்பினர்கள், பகுதிதலைவர்கள், பகுதி மக்கள் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் சென்ற கூடத்தில் குழந்தைகள் கொடுத்த மனுக்களில் உள்ள பிரச்சனைகளை தீர்த்து வைத்தமைக்கு குழந்தைகள் நன்றி கூறினார்கள்.



- 3, 9 ஆகிய வார்டுகளில் கொசு மருந்து அடிக்கப்பட்டது. கடலோரங்களில் இருந்த குப்பைகள் அகற்றப்பட்டது, சாலை வசதிகள் செய்து கொடுக்கப்பட்டது.
- 7வது வார்டில் குழந்தைகள் கொடுத்த கோரிக்கையின் அடிப்படையில் குழந்தைகளுக்காக மினிபேருந்து விடப்பட்டமைக்காக நன்றி கூறப்பட்டது.
- 6வது வார்டில் தொடர்ந்து வண்ணான் குளம் தூய்மைபடுத்தப்பட்டமைக்காக நன்றி தெரிவிக்கபட்டது.
- 38வது வார்டில் தூய்மையான குடிநீர் இயந்திரம் அமைத்து கொடுக்கப்பட்டது.
- 41,47,52 வார்டுகளில் கழிவு நீர் கால் வாய்கள் மற்றும் சாலை வசதிகள் சீரமைக்கப்பட்டதிற்காக நன்றி தெரிவிக்கபட்டது.

**20.8.2025** ஆம் தேதி மாநில குழந்தைகள் பாதுகாப்பு ஆணைய தலைவர் திருமதி. பட்டுகோட்டை விஜயா அவர்களை அருணோதயா குழந்தைகள் சங்க செயற்குழு உறுப்பினர்கள் சந்தித்து வாழ்த்துக்களையும், கோரிக்கைகளையும் சமர்பித்தனர்.



**21.8.2025** அன்று அனைத்து குழந்தைகள் சங்கத்திற்கும்“சூடான வெயில் குளிர்ச்சியான விடுமுறை” தலைப்பில் சிட்டெறும்பு புத்தகம் வழங்கப்பட்டது.

**30.8.2025** ஆம் தேதி முன்னாள் கூட்டமைப்பு துணைத் தலைவர் செல்வி. யுவஸ்ரீ அவர்கள் பள்ளியளவில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில் முதல் பரிசு பெற்றார்

## செப்டம்பர்

**01.09.2025** அன்று அருணோதயா குழந்தைகள் சங்க செயற்குழு கூட்டம் இணையதளம் வழியாக நடைபெற்றது. செயற்குழு உறுப்பினர்கள் அனைவரும் தேர்தல் ஆணையமாக இருந்து தேர்தலை நடத்துவதற்கு திட்டமிடல் செய்ததுடன் பொறுப்புகளையும் பிரித்துக் கொண்டனர்.

**05.9.2025**ஆம் தேதி அருணோதயா குழந்தைகள் சங்க கூட்டமைப்பு தேர்தல் நடைபெற்றது. இந்நிகழ்வில் 80குழந்தைகள் கலந்து கொண்டு தங்கள் தலைவர்களை தேர்ந்தெடுத்தனர்.

**27.9.25** அன்று அருணோதயா குழந்தைகள் சங்க குழந்தைகளுக்கு செயற்கை நுண்ணறிவு பயிற்சி அல்டிமெட்ரிக் நிறுவன Senior Analyst திருமதி.சுகந்தி, அவர்கள் இப்பயிற்சியை வழி நடத்தினார்கள்.

இப்பயிற்சியில் 30 குழந்தைகள் கலந்து கொண்டனர். செயற்கை நுண்ணறிவு என்றால் என்ன? அதன் மூலம் நாம் என்ன உருவாக்கலாம் என்பது குறித்த விளக்கம் அளிக்கப்பட்டது.

அதன் பிறகு குழந்தைகள் குழுவாக பிரிக்கப்பட்டு குழந்தைகள் பகுதியில் என்ன பிரச்சனைகளை சந்திக்கின்றனர் அப்பிரச்சனைகளை செயற்கை நுண்ணறிவு மூலம் எப்படி சரிசெய்யலாம் என்பது குறித்து பேசி முடிவுகளை பகிர்ந்து கொண்டனர்.

**29.9. 2025**அன்று குழந்தைகள் சங்க மாநாட்டின் முதல் செயல்பாடாக பள்ளி மதிப்பீட்டு படிவம் தயாரிக்கும் பயிற்சி குழந்தைகளுக்கு திருவொற்றியூர் அலுவலகத்தில் நடைபெற்றது. இதில் 30 குழந்தைகள் கலந்து கொண்டனர். குழந்தைகள் தயாரித்த கேள்விகளை சரிபார்த்து புதிய கேள்விகளும் இணைக்கப்பட்டது. இந்த பயிற்சியை திரு.ஷியாம்சுந்தர் அவர்கள் வழிநடத்தினார்கள்.

**31.9.2025**அன்று அசிம் பிரேம்ஜி நிறுவனத்தில் இருந்து குழந்தைகள் சங்கத்தை பார்வையிட வந்திருந்தனர். இதில் 25 குழந்தைகள் கலந்து கொண்டு குழந்தைகள் சங்கத்தில் நடைபெறும் நிகழ்வுகளை பகிர்ந்து கொண்டனர்.



**K. சர்மிளா**
12 ஆம் வகுப்பு. திருவொற்றியூர்



# குழந்தைகள் தேர்தல்

**ரம்யா:** பள்ளி முடிந்தவுடன் வீட்டை நோக்கி ரோட்டில் நடந்து வந்து கொண்டு இருந்தாள். அப்போது தன் தோழி யுவஸ்ரீயை சந்தித்தாள்.

**ரம்யா:** ஏய் யுவஸ்ரீ நில்லுடி ! எங்கே வேகவேகமா போயிகிட்டு இருக்க ?

**யுவஸ்ரீ:** எங்க அருணோதயா குழந்தைகள் சங்க கூட்டமைப்பு தேர்தல் நடக்கப் போகுது ! அதுல நான் தேர்தல் ஆணையமா இருந்து தேர்தல் நடத்தும் பொறுப்பு ஏற்று இருக்கேன். அதற்கான திட்டமிடல் கூட்டம் இணயதளம் வழியாக நடக்க போகுது அதான் நான் வேகமா போறேன்.

**ரம்யா:** குழந்தைகள் சங்கமா அப்டினா என்ன? நாங்கள் இப்போது தான் இங்கே புதியதாக குடிவந்துள்ளோம். அதனால எனக்கு இது பற்றியெல்லாம் தெரியல. எனக்கு கொஞ்சம் விவரமாக சொல்லு..

**யுவஸ்ரீ:** சரி சரி நான் இணையதள கூட்டம் முடிந்த பின் வந்து சொல்கின்றேன். (ஒரு மணி நேரத்திற்கு பிறகு யுவஸ்ரீ, ரம்யா இருவரும் மாலை வகுப்பு செல்லும் வழியில் சந்தித்தனர்)

**ரம்யா:** எதோ குழந்தைகள் தேர்தல் நடக்கப் போகுது என்று சொன்னாயே அது கு றித்து விவரமா சொல்லு எனக்கு.

**யுவஸ்ரீ:** சொல்றேன் கேளு, நம் பகுதியில் அருணோதயா குழந்தைகள் சங்கம் இருக்கு. அதில் நாங்கள் மாதம் தவறாமல் கூட்டம் போடுவோம். குழந்தைகள் உரிமை, பங்கேற்பு குறித்து பேசி முடிவெடுப்போம். வடசென்னையில் உள்ள 91 பகுதிகளில் குழந்தைகள் சங்கம் உள்ளது. வருடத்திற்கு ஒருமுறை குழந்தைகள் சங்க கூட்டமைப்பு தேர்தல் நடைபெறும்.

**ரம்யா:** தேர்தல் எப்படி நடக்கும்?

**யுவஸ்ரீ:** தேர்தல் பெரியவர்களுக்கு நடக்கும் தேர்தல் போலவே நடக்கும், முதலில் தேர்தல் குறித்த அறிவிப்பு தகவல் அளிக்கப்படும். தகுதி, விருப்பமுடைய குழந்தைகள் குறிப்பிடப்பட காலத்திற்குள் வேட்புமனு தாக்கல் செய்வார்கள். அந்த வேட்பு மனுவை தேர்தல் ஆணையம் சரிபார்த்து தகுதியுடையவர்களா என்று பார்த்து கையொப்பம் இடுவார்கள்.

**ரம்யா:** இதெல்லாம் யார் செய்வார்கள்?

**யுவஸ்ரீ:** எல்லாம் நாங்க தான்! இந்த முறை 5.9.25 அன்று கூட்டமைப்பு தேர்தலை நடத்தினோம். தேர்தல் ஆணையகுழுவில் நானும் ஒரு உறுப்பினராக இருந்து தேர்தலை நடத்தினேன்.

**ரம்யா:** அப்படியா ஆச்சரியமாக இருக்கே!

**யுவஸ்ரீ:** அதுமட்டும் இல்லை வாக்காளர் பெயரை குறியிடுவது, விரலில் மைவைப்பது, வாக்குசீட்டுகளை கொடுப்பது, போன்ற பணிகளையும் தேர்தல் ஆணையம் செய்யும். இந்த முறை வேட்பாளர்களுக்கு எழுத்து தேர்வு, வாழ்மொழி தேர்வு வைத்தோம், வேட்பாளர்கள் அனைத்து குழந்தைக்ளிடத்திலும் வாக்கெடுப்பு செய்தனர்.

**ரம்யா:** இதெல்லாம் கேட்க, கேட்க எனக்கும் ஒட்டு போட வேண்டும் என்று ஆசையாக உள்ளது.

**யுவஸ்ரீ:** அதுமட்டும் இல்லை முன்னால் குழந்தைகள் சங்க உறுப்பினர்கள், இந்நாள் இளைஞர் இயக்கத்தை சேர்த்த சபீர் அண்ணா, சங்க மித்திரா அக்கா, வல்லரசு அண்ணா, பாலாஜி அண்ணா போன்றோர் வந்தாங்க தலைமைத்துவ பண்புகள் குறித்தும், ஓட்டு சீட்டில் எவ்வாறு முத்திரையிட வேண்டும் என்றும் குழந்தைகளுக்கு செய்முறை விளக்கம் காண்பித்தனர்.

**ரம்யா:** யார் தான் வெற்றி பெற்றனர், அப்படி வெற்றி பெற்றவர்களை எப்போது அறிவிப்பிர்கள்?

**யுவஸ்ரீ:** அருணோதயா குழந்தைகள் சங்க தேர்தல் ஜனநாயக முறைப்படி நடந்தது. இதில் 91 குழந்தைகள் சங்கத்திலிருந்தும் தலைவர்கள் வந்திருந்தனர். மொத்தம் 120 குழந்தைகள் வாக்கு சீட்டுகளை பெற்று தன் வாக்குகளை பதிவு செய்தனர். தேர்தல் ஆணையக்குழு வாக்குகளை எண்ணிய பின்பு முடிவுகள் அறிவிக்கப்பட்டது. இந்த முறை ஒரு பெண் குழந்தை தலைவியாக தேர்ந்தெடுக்கபட்டார். புதிய செயற்குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கபட்டனர். இவர்கள் அனைவரும் உறுதிமொழி ஏற்று கையெழுத்திட்டு தன் பதவியை ஏற்று கொண்டனர்.

**ரம்யா:** நானும் இந்த மாதிரி நிகழ்வுகளில் பங்கேற்கனும் ஆசையாக இருக்கு.

**யுவஸ்ரீ:** கண்டிப்பாக சேர்த்து விடுறேன், அடுத்த சனிக்கிழமை கூட்டம் நடக்கும் அப்போது வா! இதோ மாலை வகுப்பு மையம் வந்துவிட்டது போகலாம் வா

| வரிசை எண் | பெயர் | பதவி |
|---|---|---|
| 1 | ஆயிஷாபாத்திமா | தலைவர் |
| 2 | P. தமிழ் | துணைத் தலைவர் |
| 3 | y. யூசுப்கான் | செயலாளர் |
| 4 | C. அனுஷ்கா | துணைச் செயலாளர் |
| 5 | D. தர்ஷன் | பொருளாளர் |
| 6 | B. யஸ்வந்த் | உறுப்பினர் |
| 7 | C. மனுஸ்ரினி | உறுப்பினர் |
| 8 | J.தர்சன் | உறுப்பினர் |
| 9 | H. சுல்த்தான் | உறுப்பினர் |
| 10 | S. ஆதியாசாலிக் | உறுப்பினர் |
| 11 | S.சக்திராஜன் | உறுப்பினர் |

இனி வரும் காலங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட செயற்குழு உறுப்பினர்கள் குழந்தைகள் சங்க கூட்டமைப்பை சிறப்பாக வழிநடத்தி செல்வார்கள்

**R.** யுவஸ்ரீ
12 ஆம் வகுப்பு, இராயபுரம்





# உலகப் போர்கள் வரலாறு

இருபதாம் நூற்றாண்டின் முதல் பாதி இவ்வுலகை நிலைகுலையச் செய்து, பெரும் சேதங்களை ஏற்படுத்திய இரண்டு மாபெரும் போர்களைச் சந்தித்தது. முதல் உலகப்போர் 1914இல் தொடங்கி 1918வரையும் இரண்டாம் உலகப்போர் 1939இல் தொடங்கி 1945 வரையும் நடைபெற்றது. உலகம் ஏற்கனவே பல போர்களை சந்தித்திருந்தாலும் இவ்விரு போர்கள் மட்டுமே உலகப்போர்கள் எனக் குறிப்பிடப்படுகின்றன. ஏனெனில் இவ்விரு போர்களிலும் மோதல்கள் நடைபெற்ற பகுதிகள் பரந்துவிரிந்ததாக இருந்தன. மேலும் இப்போர்களினால் உயிரிழந்த ஆயுதம் ஏந்திப் போரிட்டோர், பொதுமக்கள் ஆகியோரின் இறப்பு எண்ணிக்கை மிக அதிகமாக இருந்தது. மேலும் இவ்விரு போர்களும் ஐரோப்பிய, ஆசிய, ஆப்பிரிக்கக் கண்டங்களில் பல முனைகளில் நடைபெற்றன.



இவ்விரு போர்களிலும் பிரிட்டன், பிரான்ஸ், ரஷ்யா, அமெரிக்கா ஆகிய நேச, நட்பு நாடுகளின் கூட்டுப்படைகள் ஜெர்மனியின் தலைமையிலான மைய, அச்சு நாடுகளுக்கு எதிராகப் போரிட்டன. இரண்டாம் உலகப்போரில் ஜெர்மனியின் நட்பு நாடுகளாக இத்தாலி மற்றும் ஜப்பான் விளங்கின.

**முதல் உலகப் போர்**

1914 முதல் 1918 வரை நடைபெற்ற ஒரு பேரழிவு மோதலாகும்.

**முக்கிய காரணங்கள்**

**ஏகாதிபத்தியம்**

19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில், ஜெர்மனி, பிரிட்டன், பிரான்ஸ் போன்ற ஐரோப்பிய நாடுகள் உலகின் வளமான பகுதிகளை தங்கள் கட்டுப்பாட்டிற்கு கொண்டுவர போட்டியிட்டன. இந்த போட்டி ஏகாதிபத்திய பதற்றங்களை உருவாக்கியது.

**இராணுவவாதம்**

ஐரோப்பிய நாடுகள் தங்களது இராணுவ பலத்தை பெருக்கவும், ஆயுதங்களை குவிக்கவும் போட்டியிட்டன. இது போர் பதற்றங்களை அதிகரிக்க வழிவகுத்தது.

**தேசியவாதம்**

தேசியவாதம் என்பது தீவிர நாட்டுப்பற்று மற்றும் தன் நாட்டின் சிறப்பை வலியுறுத்தும் மனப்பான்மை ஆகும். பால்கன் போன்ற பகுதிகளில் இது முக்கியப் பங்காற்றியது.

**கூட்டணிகள்**

பல ஐரோப்பிய நாடுகள் தங்களுக்குள்ளே இராணுவ கூட்டணிகளை ஏற்படுத்திக் கொண்டன. இது சிறிய சண்டைகள் உலகப் போர்களாக வளர காரணமாக அமைந்தது. எடுத்துக்காட்டாக, ஜெர்மனி, ஆஸ்திரியா-ஹங்கேரி, துருக்கி, பிரிட்டன், பிரான்ஸ் மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகள் பல்வேறு கூட்டணிகளில் இருந்தன.

**போரின் உடனடி தூண்டுதல்**

பட்டத்து இளவரசர் ஃபிரான்ஸ் பெர்டினாண்ட் படுகொலை காரணமாக புரட்சி வெடித்து போர் உருவாக உடனடி காரணமாக அமைந்தது. 1914 ஜூன் 28, அன்று, ஆஸ்திரிய-ஹங்கேரியப் பேரரசின் வாரிசான பட்டத்து இளவரசர் ஃபிரான்ஸ் பெர்டினாண்ட், செர்பிய ஆதரவு பயங்கரவாதியால் சரஜேவோவில் படுகொலை செய்யப்பட்டார். இந்த சம்பவம்தான், நாடுகளுக்கு இடையேயான பல ஆண்டுகளாக குவிந்திருந்த பதட்டங்களை வெடிக்கச் செய்தது.

### போரின் விளைவுகள்

முதல் உலகப் போரில் எட்டு மில்லியன் மக்கள் மாண்டனர். 1918ல் "இன்ப்ளுயன்சா" நோயினால் மில்லியன் கணக்கான மக்கள் இறந்தனர்.

### இரண்டாம்உலகபோர்

இரண்டாம் உலகப்போர் 1939 முதல் 1945 வரை உலகளாவிய ரீதியில் நடந்த மிகப்பெரிய போராகும்.

### போர்த் தொடக்கம்

இரண்டாம் உலகப்போர் 1939 செப்டம்பர் 1 அன்று ஜெர்மனி போலந்தை கட்டியெறிந்து பிரிட்டன் மற்றும் பிரான்சுடன் போர் தொடங்கியது ஜெர்மனியின் அதிரடி தாக்குதல் போலந்தின் மீது தாக்குதல் என்று அழைக்கப்படுகிறது. அதன் பிறகு பிரிட்டன், பிரான்ஸ் ஐக்கிய நாடுகள் மற்றும் பிற நாடுகள் ஜெர்மனிக்கு எதிராக போர்தொடங்கின.



**M.** சாதனா
10 ஆம் வகுப்பு, ஆர் ஆர் நகர்
**படித்து அறிந்தது- கூகுள் இணையதளம்**

### போரில் தொடர்புடைய நாடுகள்

ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான் போன்றஅச்சு நாடுகள், பிரிட்டன், பிரான்ஸ் ரஷ்யா, போன்ற நேசநாடுகள்.

### போரில் அமெரிக்காவின் பங்கு

1941 ஜப்பானின் வேவ் ஹான்பர் தாக்குதலுக்கு பின்னர் **அமெ**ரிக்கா போரில் பங்கேற்றது.

### போரின் முடிவு

1 9 4 5 ஆம் ஆண்டு ஜெர்மனி சரணடைந்தது அதன் தலைவர் ஹிட்லர் இறந்துவிட்டார். பிறகு ஜப்பான் அமெரிக்காவின் அணு ஆயுத தாக்குதலுக்குப் பின்னர் ஆகஸ்ட் 1 9 4 5 இல் சரணடைந்தது

### போரின் விளைவுகள்

உலகில் பெரும்பாலான நாடுகள் அழிவுக்கு உள்ளாகின. மக்கள் பொருளாதார மற்றும் அரசியல் ஆகியதுறைகளில்பெரும்பாலும் மாற்றங்கள் ஏற்பட்டது, நாசி ஜெர்மனி மற்றும் அதன் மூத்த தலைவர்களாக இருந்தவர்கள் போரின் பின்னர் நீதிமன்றத்தின் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.

## சுதந்திர போராட்ட வீரர்கள்

அகிம்சை வழி அண்ணல் காந்தி !!
அடங்க மறுத்த மருத பாண்டியர்!!
அஞ்சாத சிங்கம் கட்டபொம்மன் !!
அசராத அழகு முத்து கோன்!!
ஆளுமை மிக்க புலித்தேவன்!!
ஆண்மை மிக்க மருதநாயகம் !!
இன்னலுற்ற சுப்பிரமணிய சிவா !!
இனிய கானமிசைத்த பாரதி !!
இரும்பு மனிதர் வல்லபாய் !!
வீரப்பெண் லக்குமிபாய் !!
செக்கிழுத்த வ.உ சிதம்பரனார் !!
அண்ணல் சீடர் நேருஜி !!
ஈடிலா தலைமை நேதாஜி !!
எண்ணிலா வீரர்கள் எழுதிய வாஞ்சிநாதன் !!
மண்ணிலே மலர்ந்த மகத்துவ சுதந்திரம் !!





**M.** நித்யஸ்ரீ
8 ஆம் வகுப்பு. திருவொற்றியூர்

# படிக்காத மேதை

நாட்டின் வளர்ச்சிக்காகவும் முன்னேற்றத்திற்காகவும் பாடுபட்ட பல தலைவர்களில் காமராஜரும் ஒருவர். சமுதாய வளர்ச்சிக்காகவும் பாரத விடுதலைக்காகவும் பாடுபட்ட தன்னல மற்ற தலைவர் காமராஜர்.

விருதுநகரில் வாழ்ந்த குமாரசாமி, சிவகாமி தம்பதியினருக்கு மகனாக 15 .7.1903 ஆம் ஆண்டு பிறந்தார். பெற்றோர் இட்ட பெயர் காமாட்சி என்பதாகும். அவருடைய தாயார் பிரியமாக ராசா என்றே அழைப்பார் நாளடைவில் காமாட்சி மற்றும் ராசா என்பதை இணைத்து காமராசு என்று அழைத்தனர் இவருக்கு ஆறு வயது இருக்கும் போது தந்தை குமாரசாமி மரணம் அடைந்தார். வறுமையின் காரணமாக பள்ளி படிப்பை தொடர முடியாமல் ஆறாம் வகுப்பில் பள்ளி இடைவிலகல் ஆனார். தன்னுடைய தாய்மாமன் கருப்பையா என்பவரது ஜவுளி கடையில் வேலைக்கு சேர்ந்தார்.



### நாட்டின் விடுதலைக்காக காமராசர் ஆற்றிய பணி

அங்கு இருக்கும்போதே நாளிதழ்கள் படிப்பதுடன் நம் தேச தலைவர்களின் வீர உரைகளைக் கேட்டு சுதந்திரப் போராட்டத்தில் ஆர்வம் கொண்டார். அரசியலில் இருந்த ஆர்வத்தாலும் நாட்டு பற்றாலும் தனது 1 6 வது வயதில் காங்கிரஸ் கட்சியில் தொண்டராக சேர்ந்தார். 1 9 3 0 ஆம் ஆண்டு காந்தியடிகள் மேற்கொண்ட வேதாரணியம் உப்பு சத்தியாகிரக போராட்டத்தில் காமராஜர் கலந்து கொண்டார். அதனால் போலீசாரால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். காந்தி இர்வின் உடன்படிக்கையில் 1931 ஆம் ஆண்டு சிறையில் இருந்து விடுதலை செய்யப்பட்டார்.

1940 ஆம் ஆண்டு நடந்த குண்டுவெடிப்பு, 1942 ஆம் ஆண்டு நடந்த ஆகஸ்ட் புரட்சி போன்ற போராட்டங்களில் கலந்து கொண்டதால் திரும்பவும் கைது செய்யப்பட்டார். இந்திய விடுதலைக்காக பல்வேறு போராட்டங்களில் கலந்து கொண்டு ஆறு முறை சிறைச்சென்றார் மொத்தமாக எட்டு ஆண்டுகள் சிறையில் வாழ்க்கை வாழ்ந்தார்.

### முதலமைச்சராக ஆற்றிய பணிகள்

பின்பு 1954 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் வெற்றி பெற்று தமிழகத்தின் முதலமைச்சர் ஆனார். நாட்டு மக்களுக்காக இவர் செய்த சேவை அளவுக்கரியது. விவசாயத்தை பெருக்குவதற்காக நீர்த்தேக்கங்களை அமைத்து நீர்வளத்தையும், நில வளத்தையும் பெருக்கினார். நம் நாட்டின் முன்னேற்றத்திற்காக பல தொழிற்சாலைகளை நிறுவினார்.

படிக்காத மேதை என போற்றப்பட்ட இவர் பல பள்ளி கூடங்களை கட்டினார். ஏழை எளிய மாணவர்கள் கல்வி கற்க வேண்டும் என்ற காரணத்திற்காக மதிய உணவு திட்டத்தை அறிமுகப்படுத்தினார். இதனால் 9 விழுக்காடாக இருந்த பள்ளி செல்லும் குழந்தைகளின் எண்ணிக்கை 3 7 விழுக்காடாக மாறியது. கல்வியில் ஒரு புரட்சியையே ஏற்படுத்தினார்.

தனக்கென வாழாமல் நாட்டிற்காக தன் வாழ்நாளை அர்ப்பணித்தவர், சுதந்திர போராட்ட வீரர், ஒப்பற்ற தலைவர் காமராசர் 2.10.1975 ஆண்டு இயற்கை எய்தினார். எப்பொழுதும் நாட்டைப் பற்றியே சிந்தனை செய்து கொண்டிருந்த காமராஜரின் ஒரு சாதனை சகாப்தம் முடிவுக்குவந்தது.

**S. தர்ஷன்**
10 ஆம் வகுப்பு, எண்ணூர்



# கவர்ஸ்டோரி

## "புதியதோர் உலகம் செய்வோம் – கெட்ட போரிடும் உலகத்தை வேரோடு சாய்ப்போம்"

இந்தியா ஆசியா கண்டத்தில் உள்ளது. பாரதம் என்றும் அழைக்கப்படுகின்றது. இந்தியா என்னும் பெயர் சிந்துநதியின் பெயரிலிருந்து வந்தது. இமயம் முதல் குமரி வரை அமைந்துள்ள நமது நாடு பல்வேறு சிறப்புகளை உள்ளடக்கி உள்ளது. "**செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பதேன் வந்து பாயுது காதினிலே எங்கள் தந்தையர் நாடெனும் பேச்சினிலே புதுசக்தி பிறக்குது மூச்சினிலே**"என்ற மகாகவி பாரதியாரின் பாடல் வரிகளுக்கு ஏற்ப தனிச்சிறப்பு வாய்ந்தது நமது இந்திய நாடு. பல ஆண்டுகளாக பல மன்னர்கள் நம் நாட்டை சிறப்பாக ஆட்சி புரிந்தனர் என்பதை நாம் வரலாற்றில் படித்துள்ளோம். சேர, சோழ, பாண்டியர்கள் என்ற மூவேந்தர்கள் நம் நாட்டை ஆண்டதற்கான அடையாள சின்னங்களாக கோவில்கள் அணைக்கட்டுகள், ஆறுகள், கட்டிடக்கலை, சிற்பக்கலை போன்றவற்றை நாம் காண்கின்றோம். கனிமவளங்கள் நிறைந்த நாடாக நம் இந்திய நாடு விளங்குகின்றது. மௌரிய பேரரசு, மொகலாயபேரரசு போன்ற பேரரசுகள் இந்தியாவில் தோன்றியதின் மூலம் இந்தியா ஒரு பன்முகத்தன்மை உடைய நாடாகவும், பல தரப்பட்ட கலாச்சாரங்கள், மதங்கள் மற்றும் மொழிகளின் கலவையை உள்ளடக்கிய நாடாகவும் திகழ்கின்றது. இந்திய நாட்டின் அரணாக கிழக்குப் பகுதியில் வங்காளவிரிகுடா, மேற்கில் அரபிக்கடல், தெற்கில் இந்தியப் பெருங்கடல், வடக்கில் இமயமலை என ஒரு தீபகற்ப நாடாக விளங்குகின்றது.

ஆங்கிலேயருக்கு அடிபணியாது தன் இன்னுயிர் நீத்த வீரத்திற்கு பெயர் போன வீரபாண்டிய கட்டபொம்மன், உயிர் நீத்தாலும் தேசிய கொடியை கைவிடமாட்டேன் என உயிர்நீத்த கொடி காத்த குமரன் போன்றவர்களின் தேசப்பற்று நம் இந்திய தேசத்தின் வீரவரலாற்றை பறைசாற்றும் விதமாக உள்ளது.

நம் நாட்டுக்கு ஒரு தனி சிறப்பு உண்டு. அது "**வந்தாரை வாழவைக்கும் நாடு நம் இந்திய நாடு**"அது மட்டும் இல்லாமல் உலகில் முதன் முதலில் தோன்றிய மொழி நம் தாய்மொழியான தமிழ் மொழி தான்.

நாம் அனைவரும் இந்தியர் என்று சொல்வதற்கு பெருமை கொள்ள வேண்டும். வேற்றுமையிலும் ஒற்றுமை என்ற கருத்துக்கு உகந்தநாடு நம் இந்தியா. ஆனால் இன்றைய நிலை என்ன? நாடுகளுக்கு இடையேயான போர்கள் அதிகமாக நடக்கின்றன. நாட்டில் என்ன நடக்கின்றது? எதனால் போர் நடக்கின்றது என்பது கூட தெரியாமல் குழந்தைகள், பெண்கள், முதியவர்கள் என கொத்து கொத்தாக மடிகின்றனர்.

இந்தப் போர்களுக்கு காரணமாக கூறப்படுவது யாதெனில் சுயநலம், நிலபரப்புகளை அதிகப்படுத்துதல், அரசியல், காழ்ப்புணர்ச்சி, இனவேறுபாடு, அதிகாரத்தை நிலை நிறுத்துதல், அடிமைப்படுத்துதல் போன்ற பேராசையின் விளைவுகளே ஆகும். பெற்றோரை இழந்த குழந்தைகள், கணவனை இழந்த மனைவிகள், எங்கும் அழுகுரல்கள், ஓலங்கள், அலறல்கள், வீடிழந்தமக்கள், பாலியல் வன்புணர்ச்சிக்கு ஆளாகும் ஒன்றும் அறியாத குழந்தைகள், பெண்கள், பொருளாதார சீர்கேடு போன்றவை தான் இந்தப் போர்களினால் ஏற்படும் கொடுமையான விளைவுகளே தவிர நன்மைகள் ஏதும் போர்களினால் நடைபெற போவது இல்லை.

முதல், இரண்டாம் உலகபோர்களுக்குப் பிறகு இனி உலகில் போர் நடைபெறக் கூடாது, எங்கும் சமாதானம் நிலவவேண்டுமென உலகநாடுகள் முடிவெடுத்து ஐக்கிய நாடுகள் சபையை உருவாக்கி தீர்மானங்கள் கொண்டு வரப்பட்டன. ஆனால் இன்றைய அளவிற்கு அதிகமான போர்கள் நடைபெற்றுக் கொண்டுதான் உள்ளது. உருவாக்கி தீர்மானங்கள் கொண்டு வரப்பட்டன. ஆனால் இன்றைய அளவிற்கு அதிகமான போர்கள் நடைபெற்றுக் கொண்டுதான் உள்ளது

.

"**புதியதோர் உலகம் செய்வோம் – கெட்ட போரிடும் உலகத்தை வேரோடு சாய்ப்போம்**" என்பது பாவேந்தர் பாரதிதாசனின் புகழ் பெற்ற கவிதைவரிகளாகும். உலகத்தில் அமைதி மற்றும் அன்பு நிலைத்திருக்க வேண்டும், பிரிவினைவாதத்தையும் ,போரையும் ஒழிக்க வேண்டும், பொதுவுடைமைக் கொள்கையை அடிப்படையாகக் கொண்ட ஒரு புதிய சமூகத்தை உருவாக்க வேண்டும் என்ற கருத்தை இந்த பாடல் வரிகள் நமக்கு வலியுறுத்துகின்றது.

ஆம் நண்பர்களே!! அன்பு, அமைதி ,சமாதானம் என்ற வார்த்தைகளை உச்சரிக்கின்ற போது நமக்குள் ஒரு சாந்த உணர்வு தோன்றுகின்றது அல்லவா!!

**" வாருங்கள் நண்பர்களே!!**<br>**நாம் அனைவரும் ஒன்றிணைவோம்**<br>**போரில்லா அமைதியான**<br>**உலகத்தை படைப்போம்"**



**S. ஜிஷ்ணு**
10 ஆம் வகுப்பு. எண்ணூர்
**தகவல்-கூகுள்,இணையத்தளம்**

# தலைவியின் அனுபவங்கள்

என்னுடைய பெயர் மோ.ஆயிஷா பாத்திமா .நான் சென்னை மேல் நிலைப்பள்ளி, படேல் நகரில் 10ஆம் வகுப்பு படிக்கின்றேன். முதலில் என் பெற்றோர்களுக்கு நான் நன்றி சொல்ல கடமைப்பட்டுள்ளேன். முஸ்லீம் சமுதாயம் என்றாலே பெண்களை வெளியே விடுவது குறைவு. ஆனால் என் பெற்றோர்கள் என்னை முழுமையாக நம்பி என்னை அருணோதயா பயிற்சிகளில் பங்கேற்கவைத்தனர். நான் நான்கு வருடங்களாகவே அருணோதயாவுடன் தொடர்பில் இருக்கின்றேன். முதலில் இளந்தளிர் குழுவில் உறுப்பினராக இருந்து வளரிளம் பருவத்தை பற்றி அறிந்து கொண்டேன். என் வாழ்க்கையை நெறிபடுத்த இந்த இளந்தளிர் குழுபயிற்சி எனக்கு உதவியாக இருந்தது வாழ்க்கைத் திறன்பயிற்சி, குழந்தை விஞ்ஞானி நிகழ்வில் கலந்து கொண்டு நிகழ்ச்சி தொகுப்பு செய்திருந்தேன். வளரிளம்பயிற்சி ஒரு வருடம் முடிந்தவுடன் அருணோதயா குழந்தைகள் சங்கத்தில் உறுப்பினராக இணைக்கப்பட்டேன். பல்வேறு திறன்கள்ள ன்னுள் இருந்துள்ளது. அவற்றை வெளிப்படுத்த, கண்டறியக் கூடிய சூழ்நிலையும், வாய்ப்பும் எனக்கு அருணோதயா குழந்தைகள் சங்கம் மூலம் கிடைத்தது. குழந்தைகள் நகரசபையில் நான் பங்கேற்றேன், பகுதியளவில் நடைபெறும் விழிப்புணர்வு நிகழ்வுகளில் பங்கேற்றேன்.

அருணோதயா குழந்தைகள் சங்க கூட்டமைப்பு தேர்தலில் நான் பங்கேற்றேன். என்னுடன் சேர்த்து 7 பெண் குழந்தைகள் போட்டியிட்டனர். நான் அருணோதயா குழந்தைகள் சங்கம் மற்றும் உரிமைகள் குறித்து தெளிவாக எழுதினேன், பேசினேன். என் பேச்சுத்திறன் அனைத்து குழந்தைகளையும் கவர்ந்த படியால் என்னை அனைத்து குழந்தைகளும் தலைவியாக தேர்ந்தெடுத்தனர். அந்த தருணம் எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. நான் என் தலைமைத்துவ பண்புகளை மேலும் வளர்த்துக் கொண்டு அருணோதயா குழந்தைகள் சங்க கூட்டமைப்பை நல்ல முறையில் வழிநடத்துவேன். நம் வாழ்கையில் வாய்ப்பு ஒருமுறை தான் வரும் அவற்றை நன்றாக பயன்படுத்திக் கொண்டு மேலும் நம் திறன்களை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

அருணோதயா குழந்தைகள் சங்க குழந்தைகளுக்கு நான் ஒன்று சொல்ல விரும்புகின்றேன். ஆயிரம் தடைகள் நமக்கு வரும் அவற்றை நாம் கடந்து நம் இலட்சியத்தை அடைய வேண்டும். பள்ளி இடைவிலகல் ஆகாமல் படிக்க வேண்டும், போதை போன்ற பழக்கத்திற்கு ஆளாகி நம் வாழ்கையை நாம் அழித்துக் கொள்ளகூடாது. நிறைய குழந்தைகள் சரியான வழிகாட்டுதலின்றி வாழ்கையில் தடம்மாறி சீரழிந்து வருகின்றனர். அவர்களை அருணோதயா குழந்தைகள் சங்கத்தில் இணைத்து சரியான ஆலோசனை அளித்து வாழ்கையை செம்மைப்படுத்த வழிவகுக்க வேண்டும். ஒவ்வொரு குழந்தையின் குரலுக்கும் உரியவர்கள் மதிப்பளிக்க வேண்டும் என்பதே என் நோக்கமாகும். அதை செயல்படுத்த என்னால் முடிந்த வரை போராடுவேன். என்னைத் தேர்ந்தெடுத்த உங்கள் அனைவருக்கும் என் அன்பான நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.



**M. ஆயிஷா பாத்திமா**
10 ஆம் வகுப்பு,
தலைவா் – அருணோதயா குழந்தைகள் சங்க கூட்டமைப்பு

## விடுதலை கவிதை

எத்தனை போராட்டம் !!
எத்தனை குருதியோட்டம் !!
எத்தனை ஆங்கில படையாட்டம் !!
எத்தனை அதிகாரம் !!
எத்தனை அவமானம் !!
எத்தனை படுகாயம் !!
எத்தனை உயிர் சேதம் !!
அத்தனைக்கும் விடுதலை பெற்று தந்த
தலைவர்களே !!
நீங்கள் என்றும் புவியில் மாவீரர்களே !!
மலர்களாக அல்ல மக்கள் மனதில் நீங்காத
நினைவுகளாக !!-



**P. மதுமிதா**
---- ஆம் வகுப்பு, போஜராஜன் நகர்

# Freedom Fighters

### Introduction

India'sfight for freedom was guided by brave individuals who dedicated their lives to securing our nations independence. Let us learn about heroes who played crucial roles in the historic struggle.

### Mahatma Gandhi

He was a peaceful leader who believed in solving problems without violence. His non - violent methods, known as satyagraha encouraged people to fight for their rights without using force.

### Pandit Jawaharlal Nehru

India's first prime minister. Pandit Jawaharlal Nehru was a wise leader who worked closely with Mahatma Gandhi. His ideas and hard work helped shape the future of our country.

### Nethaji Subhas Chandra Bose

A strong and passionate leader. N.S.C. Bosefomed the Indian National army (INA) to challenge the British. His famous words, "Give me blood and I shall give you freedom" motivated many to join the struggle.

### Bhagat singh, Raj kuru, Sukhdev

These young heroes sacrificed their lives for the cause of freedom. Their bravery and determination inspired millions to stand up against injustice.

### Sarojini Naidu

She was a remarkable women who fought for both freedom and women's rights known as " Nightingale of India" Her powerful words encouraged many to join the freedom fight.

### SardarValla BhaiPatel

A strong and decisive leader. Patel played a crucial role in unifying India after independence. His efforts ensured that our diverse country stayed united.

### Conclusion

Each of these freedom fighters contributed uniquely to our struggle for independence. Their sacrifices whether through peaceful protests, forming armies or giving their lives paved the way for India's freedom on August 15 1947



C. புவனா
11 ஆம் வகுப்பு, திருவொற்றியூர்



## Hero of India



Netaji's Subash Chandra Bose was one of the greatest freedom fighters of India. He was a true patriot who sacrificed his entire life for independence of country. His courage, leadership and recognition, made him a national hero, respected by all Indians.

Subhash Chandra Bose was born on 23rd January 1897 in Cuttack Odisha. From an young age, he was brilliant in studies and had strong leadership qualities. After completing his education in India, he went to England to prepare for the Indian civil services. However, he resigned from the job because he wanted toserve his motherland and free India from British.

He was a great follower of Swami Vivekananda and believed in discipline, strength and dedication. He joined the Indian National Congress and worked for the country. Later, he formed the FORWARD BLOC to unite Indians for the freedom struggle.

During the Second World War, he formed the AZAD HIND FAUJ (INDIAN NATIONAL ARMY) and gave the famous slogan "GIVE ME BLOOD, AND I WILL GIVE YOU FREEDOM". His words inspired thousands of Indians to join the fight against the British. With the support of Japan and Germany he fought bravely, but unfortunately, he could not achieve complete success.

Though Netaji's death in 1945 remains a mystery, his spirit of patriotism still inspires millions. He is remembered as a symbol of courage, selflessness, and love for the nation.

### Conclusion

Nethaji Subash Chandra Bose will always remain an unforgettable hero of India. His struggle and sacrifices reminds us of our duty towards our country. As responsible citizens, we should follow his ideas of bravery, unity and patriotism.



**M.** சுசிந்தர்
10 ஆம் வகுப்பு, கொருக்குப்பேட்டை
Referred by Wikipedia

## போர்க் கவிதை

அன்று தொட்டு இன்று வரை !!
ஆதிக்க மன மனிதரிடையே !!
இழிவான போர்க்களம் இன்று வரை !!
ஈண்ட வேகம் கொண்டு தொடர்கிறது !!
ஊரே அழிந்துபோகுதே!!
எங்கும் அழுகை குரல் கேட்குதே !!
போர் இல்லாத உலகத்தை !!
எப்போது பார்ப்போமோ !!



**I.** ஐஸ்வர்யா
9 ஆம் வகுப்பு, ஆர் ஆர் நகர்

## விடுதலை

அடிமைத்தனம்
அறுத்த தினம் !!
ஆங்கிலேயர் ஆட்சி
முடிந்த தினம் !!
இந்தியா விடுதலை
அடைந்த தினம் !!





**M.** சாதனா
10 ஆம் வகுப்பு, ஆர் ஆர் நகர்

# எப்படிப்பட்ட போர் தேவை ?

அன்புக் குழந்தைகளே! இந்த மாத சிட்டெறும்பு பேசுகிறது என்ற நூலில் போர்கள் என்ற தலைப்பில் கட்டுரைகள், கவிதைகள் மேலும் உங்கள் சிந்தனைகளை பல வடிவங்களில் தந்துள்ளீர்கள். நானும் உங்கள் சிந்தனைகளுடன் இணைந்து போர்கள் நமக்குத் தேவையா? அப்படியே தேவையாக இருந்தால் எப்படிப்பட்ட போர்கள் தேவை? மேலும் போர்கள் நமக்கு தீர்வை கொடுக்குமா? என்ற கேள்விகளுக்கு இந்தக் கட்டுரையில் பதிலை காண்போம்.

**போர்கள்**

போர்கள் என்று நினைக்கும் போது உடனே நம் நினைவுக்கு வருவது முதல் உலகப்போர், இரண்டாம் உலகப்போர், காசா- இஸ்ரேல் போர், ரஷ்யா - உக்ரைன் போர், போன்றவையாகும். உடனே இதுதான் உலகத்தில் போர்கள் என்றும், தொடக்க காலத்தில் போர்கள் இல்லை என்றும் நினைத்து விடக்கூடாது.

போர்கள் இந்த உலகத்தில் மனிதர்கள் தோன்றி, நிலங்களை ஆக்கிரமித்து, அதிகார ஆட்சி வாழ்வு வாழத் தொடங்கிய காலத்திலிருந்தே இருக்கிறது. பெரும்பாலும் அதிகாரத்தில் இருப்பவர்களின் சுயநலத்திற்காகவும், நிலங்களை ஆக்கிரமிப்பதற்காகவும், வளங்களை சுரண்டுவதற்காகவும், தன் மதத்தை பெரிது படுத்துவதற்காகவும், கருத்தியல்களில் வேறுபாடுகள் இருந்தால் அதை சரி செய்து கொள்வதற்காகவும் போர்கள் நடத்தப்படுகிறது.

போர்கள் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள், சமூக குழுக்கள், இனங்கள் அல்லது நாடுகளுக்கு இடையே நடக்கும் ஒழுங்கு அமைக்கப்பட்ட ஒரு ஆயுத மோதல் மற்றும் வன்முறை கலகமாகும்.

போரில் பங்கெடுப்பவர்கள் அடுத்திருப்பவரை எப்படியும் கொல்ல வேண்டும், பழி வாங்க வேண்டும் என்ற எண்ணத்தோடு தான் செயல்படுவார்கள். இதன் விளைவு இரத்தமும், கண்ணீரும், உயிர் இழப்பும் மட்டுமே நடக்கும்..

**குழந்தையின் போர்**

என்னுடைய நண்பர் வீட்டிற்கு ஒரு நாள் நான் சென்று இருந்தேன். அவர்களுடைய ஐந்து வயது மகள் மதிய உணவு உண்ண தயாராக இருந்தாள். அவளுடைய பெற்றோர்கள் உணவை கொடுக்கும் போது அதில் சிக்கன் துண்டுகள் இல்லை. உடனே அந்தக் குழந்தை அழத் தொடங்கியது. பெற்றோர்கள் கடைக்குச் சென்று சிக்கன் வாங்கி வந்து, கொடுத்த பிறகு தான் குழந்தை மதிய உணவைச் சாப்பிட ஆரம்பித்தது.

இந்நிகழ்வு பத்தில் ஒன்றாக என்னில் கடந்து சென்றது. ஆனால், போர் பற்றி சிந்திக்கும் போது இந்நிகழ்வு என் மனக்கண் முன் பலமுறை வந்தது. ஏனெனில் அந்தக் குழந்தை தன்னுடைய தேவைக்கு தன்னை வருத்தி கத்தும் போதும், அழும்போதும் அதனுடைய தேவை நிறைவேற்றப்படுகிறது.

இந்நிகழ்வு ஒரு சாதாரண ஒன்றாக இருந்தாலும் அந்தக் குழந்தையின் தன்மை பிடித்திருந்தது. குழந்தை தனது தேவையை நிறைவேற்ற பிறரைக் காயப்படுத்தாமல் தன்னை வற்புறுத்தி அகிம்சை வழியை சொல்லிக் கொடுக்கும் பாடமாக எனக்கு இருந்தது.



நமது நாட்டின் மகாத்மா காந்தி நம் நாட்டின் விடுதலைக்காக ஆயுதப் படையையோ அல்லது வன்முறையையோ தேர்ந்தெடுக்கவில்லை. மாறாக அகிம்சை வழியில் மக்களை ஒன்றிணைத்தார். நமது நாட்டின் விடுதலைக்கு எதிரியாக இருந்த ஆங்கிலேயர்களை, ஆயுதங்கள் அல்லது வன்முறைச் செயல்களால் தாக்கவில்லை. மாறாக உணவு உண்ணாப்போரையும், சத்தியா கிரகப் போரையும், உப்பு சத்தியாகிரகம் போன்ற போர்களை முன்னிறுத்தி செயல்படுத்தினார். இந்த நிகழ்வுகளில் பிறரை காயப்படுத்தாமல் தங்களை வற்புறுத்தும் செயல்களைக் கொண்டு போரைத் தொடங்கினார். அந்தப் போரில் எதிரிகளுக்கு இரத்தம் ஓடவில்லை, கண்ணீர் சிந்தப்படவில்லை, அவர்களின் உயிர்கள் பறிக்கப்படவில்லை. மாறாக தங்களின் அன்பும், மன்னிப்பும், நீதியும், சகோதரத்துவமும் அதிகம் காட்டப்பட்டன. அதன் பயனாக நம் நாடு சுதந்திரம் பெற்று 79 ஆண்டுகளைக் கடந்துள்ளது.

காந்தி ஏற்படுத்திய அகிம்சை வழிப் போர்கள் மற்ற நாடுகளில் இருந்த நெல்சன் மண்டேலா, மார்ட்டின் லூதர் ஜூனியர் போன்றவர்களின் உள்ளத்தில் தாக்கங்களை ஏற்படுத்தி, அவர்களையும் அவர்களின் நாட்டில் நடைமுறைப்படுத்த வைத்தது. அகிம்சை போர்கள் மக்களுக்கு ஒரு நிரந்தர தீர்வை பெற்றுத் தருகிறது.

மேலும் அன்பு, மன்னிப்பு, நீதி மற்றும் சகோதரத்துவத்தில் வளர உதவுகிறது. ஆனால் வன்முறை போர்கள் நிரந்தரத் தீர்வைத் தருவதில்லை. கோபத்தையும், பகைமையையும், ஆணவத்தையும் அதிகமாக வளர்கிறது. மேலும் வன்முறையின் உச்சத்தைத் தூண்டுகிறது. அதற்கு எடுத்துக்காட்டாக தான் இஸ்ரேல் -காசா போர் ஒரு ஆண்டு அல்லது இரண்டு ஆண்டு போர்கள் அல்ல. அது 20 ஆண்டுகளுக்கு மேலாக இருக்கிறது. அதனால் இன்னும் நிரந்தரத் தீர்வு காணாமல் இருக்கிறது. அதைத் தொடர்ந்து ரஷ்யா - உக்ரைன் போரும் தொடர்ந்து நடக்கிறது. நிரந்தர தீர்வு இல்லை.

**சிந்திப்போம்**

அன்புக் குழந்தைகளே! நமது நாட்டில் இன்னும் பல பிரச்சனைகள் இருக்கின்றன. எடுத்துக்காட்டாக, குழந்தைத் தொழிலாளர்கள், குழந்தைகளைக் கடத்தல், பெண்களை இழிவாக நடத்துதல், பெண்களுக்கு வரதட்சனை கொடுமைகள் கொடுத்தல், பணக்கார முதலைகள் ஏழை மக்களின் நிலங்களை அபகரித்தல், தொழிற்சாலைகளில் ஏற்படும் கழிவுகளை ஏழை மக்கள் வாழும் இடங்களில் நிறைத்தல், அதனால் மக்களின் வாழ்வாதாரங்கள் பாதிக்கப்படுகிறது. அதற்கு அரசும் அதிகாரத்தில் இருப்பவர்களும் தொழிற்சாலை தலைவர்களும் எந்த முடிவையும் எடுப்பதில்லை. இதுபோன்று எண்ணற்ற பிரச்சனைகள் நம் மத்தியில் நடந்து கொண்டு தான் இருக்கின்றன. இதற்கு ஆயுதப்போர் அல்லது வன்முறைப் போர் புரிந்தால் நிரந்தரத் தீர்வு கிடைக்காது. அதற்கான விளைவுகள் தான் வரும். அந்த விளைவுகள் நமக்கே பாதகமாக அமையும். எனவே காந்தி சொன்ன அகிம்சை போர்களை ஒவ்வொரு பிரச்சனைகளுக்கும் முன்னெடுத்து செல்லும்பொழுதும், ஒன்றிணைந்து பயணிக்கும் போதும், நிரந்தரத் தீர்வு கிடைக்கும். வளமான சமூகம் அமையும். அந்த பாரதி கண்ட

**"இனிய பொழில்கள் நெடிய வயல்கள் எந்நரும் பெருநாடு" கனியும் கிழங்குத் தானியங்களும் கணக்கின்றி தரும் நாடு" என்று வளங்கள் மிக்க நாடாகவும், அமைதியை தரும் நாடாக மாறும்.**



பிரதர். டோனி SJ
இறையியல் இரண்டாம் ஆண்டு, அருட்கடல்



# அனைவரும் சமம்

## சிறுகதை

ஒரு அடர்ந்த காடு, அந்த காட்டில் பல விதமான விலங்குகள், பறவைகள் வாழ்ந்து வந்தது. அந்தகாட்டில் சுவையான பழம் தரும் மரங்கள், சலசல சத்தத்துடன் ஓடும் அழகான அருவிகள், உயர்ந்த மலைகள், பறவைகளின் இனிமையான ஓசைகள், காற்றில் மிதந்து வரும் பூக்களின் நறுமணம் எனபார்ப்பதற்கும், ரசிபதற்கும் ஏற்ற இடமாக அந்த காடு மிகவும் அழகாகவும், அமைதியாகவும் இருந்தது. அங்கு வாழும் அனைத்து விலங்குகளும் ஒற்றுமையுடனும் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தது.



தீடிரென்று காட்டில் உள்ள விலங்களுக்குள் நீ பெரியவன் நான் பெரியவன் என்ற பிரச்னை வந்தது. சிங்கம் சொன்னது நான் காட்டுக்கு ராஜா அதனால் நான் சிறந்தவன் என்றது, புலி சொன்னது நான் வலிமையானவன் என்னைக் கண்டு அனைவரும் நடுங்குவார்கள் அதனால் நானே சிறந்தவன் என்றது. ஒட்டகச்சிவிங்கி சொன்னது நானே உயரமானவன் ஆகவே நானே சிறந்தவன் என்றது. யானை சொன்னது நானே அதிக பலம் கொண்டவன் உருவத்திலும் பெரியவன் என்றது.

இப்படி சண்டையிட்டுக் கொண்டிருக்கும் போது அனைத்து விலங்குகளும் அலறிய வண்ணம் துடித்தனர். ஏனென்றால் அவைகள் நின்று சண்டையிட்டுக் கொண்டிருந்த இடம் சிட்டெறும்பு புற்று. சிட்டெறும்பு புற்றை அவர்கள் மிதித்ததினால் எறும்புகள் எல்லாம் விலங்களின் காது,மூக்கு, கை, கால் வாய் போன்ற இடங்களில் கடித்தது. எல்லா விலங்குகளும் ஐயோ! அம்மா! என்று அலறி அடித்து ஓடின. ஒரு சிறு எறும்புகள் அனைத்து விலங்குகளையும் ஓடவைத்தது. நாம் தான் பெரியவன் என்று நினைத்தோம் ! ஆனால் சின்ன எறும்புகள் நமக்கு பாடம் புகட்டி விட்டதே !என்று விலங்குகள் எல்லாம் யோசித்தன!

அப்போது சிங்கம் சொன்னது இனி நமக்குள் சண்டை வேண்டாம், நான் புத்திசாலி, நான் வலிமையானவன் என்ற அகம்பாவம் வேண்டாம் நாம் அனைவரும் சமமே, என்றது. ஆமாம், ஆமாம் நாம் அனைவரும் சமம் தான் என்று நாங்கள் புரிந்து கொண்டோம் என்றன விலங்குகள். மீண்டும் காட்டில் ஒற்றுமையும், மகிழ்ச்சியும் நிரம்பியது.

**V.** சுஜிதா
11 ஆம் வகுப்பு, தண்டையார்பேட்டை








# வெற்றிபடிகட்டு

என்னுடைய பெயர் மீரா. நான் 25 வருடமாக அருணோதயாவின் தொடர்பில் இருக்கின்றேன். முதலில் நான் அருணோதயா நிறுவனம் துவங்கிய சுயஉதவி குழுவில் உறுப்பினராக இணைத்து கொண்டேன். அருணோதயாவின் மூலம் பல பயிற்சிகளை பெற்றேன். அதில் ஒன்று தொழில் முனைவோர் பயிற்சி. இப்பயிற்சியின் மூலம் கிடைத்த தன்னம்பிக்கையின் மூலம் சிறுதொழிலையும் துவக்கினேன். சேமிப்பின் முக்கியத்துவத்தை உணர்ந்த நான் சிறுகசிறுக சேமித்து என் குழந்தைகளை வளர்த்தேன். அதன் மூலம் குடும்பத்தையும் வழிநடத்தினேன். பிறகு என்னுடைய குழந்தைகளையும் அருணோதயா குழந்தைகள் சங்கத்தில் இணைத்தேன். அவர்கள் பங்கேற்பின் மூலம் இன்று நல்ல நிலைமையில் உள்ளனர்.

அம்பேத்கார் நகர் பகுதியில் சமூகம் மற்றும் குழந்தைகள் உரிமை கண்காணிப்பு குழுவில் ஒரு உறுப்பினராக இருந்து பகுதியில் குழந்தைகள் உரிமைக்கான பிரச்சனைகளை கண்டறிந்து தீர்வு காணும் வகையிலான செயல்பாடுகளை செய்துள்ளேன்.

மேலும் வார்டு அளவிலான குழந்தைகள் பாதுகாப்பு குழுவிலும் ஒரு உறுப்பினராக உள்ளேன். இதன் மூலம் பல அதிகாரிகளுடன் பேசும் வாய்ப்பும், அவர்களிடம் பிரச்சனைளை நேரடியாக பகிர்ந்து கொள்ளும் வாய்ப்பும் எனக்கு கிடைத்துள்ளது. என் பகுதி வார்டில் உள்ள குழந்தைகளுக்கான பிரச்சனைகளை கையில் எடுத்து அதற்க்கு தீர்வு காணும் போது மனதிற்கு மகிழ்ச்சியாக உள்ளது.

மேலும் என் திறனை நான் வளர்த்து கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தில் நான் அருணோதயாவின் தையல் பயிற்சி வகுப்பில் சேர்ந்து பயிற்சி பெற்று சான்றிதழ் வாங்கினேன். என்ஆடைகள், பேரன் பேத்திகள் ஆடைகளை நானே தைப்பேன் அது எனக்கு மேலும் மகிழ்ச்சியை தந்தது. மேலும் ஆரி பயிற்சியும் பெற்றேன். இப்போது நான் 10 பெண்களுக்கு ஆரி பயிற்றுவிக்கும் ஆசிரியராக அருணோதயாவில் பணி புரிகிறேன் என்பதை பெருமையுடன் தெரிவித்து கொள்கின்றேன்.

என் மகன் ஷரிப் அருணோதயா குழந்தைகள் சங்கத்தின் முன்னாள் உறுப்பினர் இன்று ஒரு சினிமா பட இயக்குனராக 2 படங்கள் எடுத்துள்ளார். என் மகள் வழி பேத்தி இன்று அருணோதயா குழந்தைகள் சங்கத்தின் கூட்டமைப்பு உறுப்பினராக உள்ளார். குழந்தைகள் உரிமை மற்றும் பங்கேற்பை போற்றி பாதுகாக்கும் குடும்பமாக என் குடும்பம் உள்ளது. எனக்கு வாய்பளித்து, வழிநடத்திய அருணோதயா இயக்குனர் மற்றும் பணியாளர்களுக்கு என் நன்றியை தெரிவித்து கொள்கின்றேன்.



**திருமதி. மீரா**
அருணோதயா பணியாளர், கொருக்குப்பேட்டை

## புதிர்கள்

1. இவன் வாலுக்கு வையகமே நடுங்கும் அவன் யார் ?
2. பிடுங்கலாம் நட முடியாது அது என்ன?
3. உடம்பில்லா ஒருவன் 10 சட்டை அணிந்து இருப்பான் அவன் யார் ?
4. வெள்ளை ஆடை உடுத்திய மஞ்சள் மகாராணி அவள் யார்?
5. வாயிலே தோன்றிவாயிலே முடியும் பூ அது என்ன பூ ?

**விடை**

1. தேள்
2. முடி
3. வெங்காயம்
4. முட்டை
5. சிரிப்பு

# வாழ்த்து மடல்

அருணோதயா குழந்தைகள் சங்க கூட்டமைப்பு வெளியிட்டுள்ள சிட்டெறும்பு பேசுது என்ற நூலினை படித்தேன்

இந்த நூலில் குழந்தைகள் ஆசிரியர்கள் மற்றும் அருணோதயா பணியாளர்கள் தங்களுக்கு வழங்கிய தன்னம்பிக்கை இந்நூலில் கல்வி பயலும் முறை, போன்றவற்றை கதைகள் மூலமாக இந்நூலில் சிறப்பாக தெரிவித்துள்ளனர்.

மேலும் தங்களுக்கு பிடித்த பண்டிகைகள் என்ற வகையில் தை பொங்கல், ஆங்கில புத்தாண்டு போன்றவற்றை எழுத்துகள் மூலம் கண் முன்பே கொண்டு வந்து நிறுத்தியுள்ளனர்.

"குழந்தை திருமணம் நாட்டிற்கு அவமானம்" என்ற தலைப்பில் பெண் குழந்தைகளுக்கு விழிப்புணர்வை 12 ஆம் வகுப்பு மாணவன் D. சந்தோஷ் சிறப்பாக விவரித்துள்ளார்

இன்று சமுதாயத்தில் அதிக அளவு தீமையை ஏற்படுத்தும் போதை பொருட்கள் குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்திய 10 ஆம் வகுப்பு மாணவன் H. சந்திரகாசன் அவர்களுக்கு எனது பாராட்டுதலை தெரிவித்து கொள்கிறேன்.

அருணோதயா மூலம் கேரம் பயிற்சி பெறுவதற்கு S. ரோஷன் என்ற 7ஆம் வகுப்பு மாணவன் கேரம் போர்டு வழங்கியதும் அவருக்கு பயிற்சி அளித்து மாநில அளவில் போட்டியில் கலந்து கொள்ளும் அளவிற்கு அவனுடைய திறமையை வளர்த்த ஆசிரியர் அவர்களுக்கு எனது இதயபூர்வமான பாராட்டுகளை தெரிவித்து கொள்கிறேன்.

தன் தந்தையின் போதை பழக்கத்தால் மன உளைச்சலுக்கு ஆளாக்கப்பட்டு பள்ளிக்கு செல்லாமல் இருந்த S. புகழேந்தி என்ற மாணவனை புரிதல் செய்து மீண்டும் பள்ளியில் பயிலுவதற்கு ஏற்பாடு செய்து கொடுத்த அமைத்த அருணோதயா பணியாளர்க்கு நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

குழந்தைகளின் ஓவியம், கருத்துகள், கவிதை, என்னை மிகவும் கவர்ந்தது. அனைத்து குழந்தைகளுக்கும் எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.



K. கார்த்திக்
7வது வார்டு
மாமன்ற உறுப்பினர்










**உங்கள் படைப்புகளையும், செய்திகளையும், கருத்துக்களையும்**
**வாழ்த்துக்களுடன் வரவேற்கிறோம்**